
# சிறு கீற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறு கீற்று

தாரணி
இந்திரசெல்வன்

26.06.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இருட்டறையில் காத்து
வெளியுலகை
அறிமுகப்படுத்திய அன்னைக்கும்
அகிலம் அறிந்திட
வழிப்படுத்திய தந்தைக்கும்
வாழ வழிகாட்டிய ஆசானுக்கும்
உரமூட்டிய உடன்பிறப்பிற்கும்
தோள் கொடுத்த தோழமைக்கும்
நேற்று
இன்று
நாளை என பாட்டாளி வர்க்கத்தின்
உயர்வுக்காய்
விடிவுக்காய்
உழைத்திடும் நல்லுள்ளங்களுக்கும்
எங்கள் கவி சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

மனித மனம் ஒரு சுனை போன்றது. அதில் ஓய்வில்லாமல் எண்ணங்கள் ஊற்றெடுக்கின்றன. சூழவுள்ள உலகின் காட்சிகள் காட்சிப்பிறள்வுகள், நிகழ்வுகள், ஊடாட்டங்கள் எல்லாமே இந்த ஊற்றெடுக்கும் எண்ணங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. ஒருவரின் நடத்தை, பழக்கவழக்கம், பேசும்விதம், வாழ்வை நடத்திச் செல்லுவதற்கான ஒரு நபரது தீர்மானம் என்று அனைத்தும் இந்த எண்ணங்களிலிருந்து தான் வெளிப்படுகின்றன இவ்வாறு வெளிப்படும் சூழலுடனான எதிர்வினைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிநபருக்கும் உரிய தனித்துவமான தன்மைகளை கொண்டிருக்கின்றன. இந்த வெளிப்பாட்டுக்கு உள்ளார்ந்தமாக அமைந்திருக்கும் அழகுணர்ச்சி இவ்வெளிப்பாடுகளை கவிதையின் தரத்திற்கு உயர்த்தக்காரணமாக இருக்கிறது. நடை, உடை, ஆடல், பாடல், சித்திரம், மொழி என்று எல்லாவற்றிலும் ஒரு தனி நபருக்குரிய கவித்துவத்தை வெளிப்படுத்தும் அழகுணர்ச்சி வெவ்வேறு அளவுகளில் இருக்கவே செய்கின்றது.

அதை அடையாளம் கண்டு வளர்த்தெடுக்கவும், வெளிப்படுத்தலுக்கான புத்திபூர்வமான உழைப்பை மேற்கொள்ளவும் தயாராக இருப்பவர்கள் தமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் கவிதையாக வளர்தெடுக்கும் ஆற்றலில் வெளிப்படுத்துகிறார்கள்.

உண்மையில் கவிதை மொழியால் வெளிப்படுத்தப்படுகின்ற போதும், அதன் மூலம் மொழியல்ல உணர்வும் அறிவும் கலந்து வெளிப்படும் எண்ணம் மொழி அதனை வெளிப்படுத்தவும், பகிர்வும் அவசியமான காவியாக அமைகின்றது. இதனால் அது மிகவும் முக்கியமான ஒரு பண்பை ஆற்றுகிறது. மொழியில் ஆழமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிச்சயமும், தெளிவும் இருப்பது கவிதையின் துல்லியமான படிப்போரைப் பற்றிக் கொள்ளும் ஆற்றல் மிக்க வெளிப்பாட்டிற்கு மிகவும் அவசியமானது. நிறைய வாசிப்புப்பழக்கமும் கவிதைகளுடனான உறவும் அவற்றுள் மூழ்கிப் பயணிக்கும் ஆற்றலும் வளர்தெடுக்கப்படும் போது ஒருவர் நல்ல கவிஞராக பரிணமிக்க தேவையான மொழிசார்ந்த தகுதியைப் பெற்றுக்கொள்கிறார். ஆனால் மொழிசார்ந்த் தகுதி மட்டும் ஒருவரை கவிஞராக்கி விடுவதில்லை. அது வெளிப்பாட்டுத்தகுதி மட்டுமே ஆழமாக மனதில் உருவாகும் கவித்துவ எண்ணங்கள் தான் கவிதைக்கு அடிப்படையாகின்றன.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் கவிதைக்கான எண்ண ஊற்றுக்களை என்னால் அடையாளம் காண முடிகிறது. இந்த இளம் கவிஞர்களின் சமூக அக்கறையும் அதன் மீது எதிர்வினை ஆற்றும் மனவெழுச்சியும் அதை மொழிவெளிப்பாடாக கொண்டுவரும் ஆர்வமும் மிகவும் பாராட்டப்பட வேண்டியவை. வளர்க்கப்பட வேண்டியவை. பல கவிதைகள் மலையக மக்களின் இன்னல்களைப் பேசுகின்றன.

உதாரணமாக சம்பள உயர்வு எனும் கவிதை தலைமைகளைச் சாடுகின்றது.

"ஏழையின் இரத்தத்தை உறிஞ்சி
மாளிகையின் பஞ்சணையில்
படுத்துறங்கி
தங்கத்தட்டில் பரிமாறி
வாழும் தலைமைக்கு
வறுமையின் வாசனை
எங்கே புரியப்போகிறது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரணியின் கவிதைகளில் பெண்நிலைச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன. வாழ முயலும் விதவைப்பெண் சமூகத்தில் பல சிக்கல்களுக்குள்ளாவதையும் அவள் தனது கால்களில் நின்றபடி வாழவேணும் என்ற சிந்தனையும் "விதவையின் வாழ்வு" கவிதையில் வெளிப்படுகின்றது.

"ஊரார் பேச்சை மீறி
மண்ணைக் கொத்துகிறாள்
நாளை விடியலுக்காய்!

இவ்வாறு பல கவிதைகளின் சிறப்புக்களைக் கூறலாம். எனினும் இடைவிடாத மொழிப்பயிற்சி, தொடர்ச்சியான கவிதைகளுடனான பரிச்சயம் என்பன அவர்களை நிச்சயம் மேலே கொண்டுவரும் என நம்புகிறேன்.

மலையகம் பல நல்ல கவிஞர்களைக் கண்ட பூமி. அதற்கென ஒரு செழிப்புமிக்க கவிதைப்பாரம்பரியமும் உண்டு. அந்தப் பாரம்பரியத்தில் கால்பதித்து நின்று அதை உள்வாங்கி மேலெழுந்து தாரணியும், இந்திரசெல்வனும் சிகரம் தொடவேண்டும் என்று வாழ்த்துகிறேன். இத்தொகுப்பு வெளியீட்டோடு திருமணபந்தத்தில் இணையும் இவர்கள் இருவரையும் மீண்டும் வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

நன்றி

**திருமதி ஔவை விக்னேஸ்வரன்**
152/6, பேயல் பேர்ள் கார்டின்
அல்விஸ்டவுண் றோட்
வத்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் உரை

பிறந்த பயனுக்காய் பெற்ற கடனுக்காய் அளித்த அறிவுக்காய் விட்டுச் செல்லும் அடையாளம் இந்த கவிதைகள். எனது வளர்ச்சிப் படியில் முதல் அடித்தளம் பெற்றோர்களான திரு.திருமதி துரைராஜ் சந்திரா. அறிவுப் பசியை தூண்டிய ஆசிரியர்.திரு.அருள்மொழி வர்மன். மனிதனாக வாழ்ந்திட கற்றுத் தந்த தமிழாசான் திரு.சிவராஜா. ஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் நண்பர்கள் என அனைவரும் என்னில் நம்பிக்கையினையும் ஊக்கத்தினையும் வழங்கியதன் விளைவே இன்றைய கவிதையின் வெளிப்பாடு.

நம் சமூகத்தில் பிறந்து வளர்ந்து தெளிந்ததற்காய் நாம் விட்டுச் செல்லும் ஒரு சிறு ஒளி கீற்றாகிவிடும் என்ற நம்பிக்கையில் மண வாழ்வில் இணையும் நாங்கள் சிறு முயற்சியாய் கவிதைத் துறையில் களமிறங்கு கின்றோம்.

எண்ணங்கள் ஒன்றானால் இருவரல்ல ஒருவர். கொள்கையில் மாற்றத்தில் எண்ணக்கருவில் மாற்றமில்லையாகையால் கவிகளை பிரித்தெழுத விரும்பவில்லை. இக்கவிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலப் பகுதியில் சூழ்நிலைகளில் இடங்களில் வந்த வெளிப்பாடு. ஆறுமாத சந்திப்பில் குணம் கொள்கை அறிந்தோம் பதிவுத் திருமணத்தின் பின் இருந்த 4 மாத காலப்பகுதியில் எங்கள் திருமண வைபவத்திற்காக எடுத்துக்கொண்ட சிறு முயற்சி இதற்கு தூண்டுதலும் பலமும் தந்தது எனது வாழ்க்கைத் துணைவர்.

எழுத முனையும் நாம் மலையக பாட்டாளி வர்க்கத்தில் தோன்றியவர்கள். நம் சமூகத்தின் துயரமான வாழ்கையை எதிர்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய மலையக சமூகத்தை கட்டியெழுப்பவேண்டிய சமூக பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு சிறு வயது முதலே தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டி வளர்த்த எனது பெற்றோர்களான திரு.திருமதி வேலு செல்வம். சமூக சிந்தனை எண்ணில் விதைத்த திரு.சிவம் பிரபாகரன், கவிதைத்துறைக்கு புதியவன் என்றாலும் எழுத்து ஆர்வத்தை தூண்டிய அரசியல் விஞ்ஞான ஆசிரியரும் பத்திரிகையாளருமான திரு.அ.நிக்ஸன், அரசியல்துறை ஆய்வாளர் திரு.சி.அ.யோதிலிங்கம், வாசிப்பு சிந்தனை எண்ணில் ஏற்படுத்திய திரு.பிலிப் இராமையா, தொழிற்சங்க செயற்பாடுகளில் வழி நடத்திய திரு.ஜோசப் ஸ்டாலின், கல்வியை பெற காரணமாகவிருந்த திருமதி.முத்துசாமி குடும்பத்தினர் மற்றும் திருமதி முத்துலிங்கம் குடும்பத்தினர் என்னையும் ஓர் கவிஞனாக்கிய வாழ்க்கை துணை அனைவரும் வாழ்க்கையில் தடம்பதிப்பதற்கு காரணமானவர்கள்.

இது எமது முதல் கவிதைப் புத்தகம் இந்த கவிதைகளில் பிழைகள் அல்லது கருத்து மயக்கங்கள் இருந்தால் அதனை சுட்டிக்காட்டி எம்மை ஊக்கப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். கவிஞர்கள் தலைக்கனம் பிடித்தவர்கள் அல்ல. எதிர்காலத்தில் கவிஞர்களாக வருவதற்கு எண்ணுபவர்கள், நான் என்ற ஆணவத்தை ஒதுக்கிவிட வேண்டும். தமது சமூகத்தை, கலாசாரத்தை வளர்த்து எடுக்க விரும்பும் இளம் கவிஞர்கள் தான்சார்ந்த சமூகத்தின் விருப்பு வெறுப்புகளை முதலில் உணர்ந்து கொள்வது நல்லது. அதற்கு எங்கள் கீற்று கவிதைகளை உதாரணமாக முன் வைக்கலாமா இல்லையா என்பதைக் கூட உங்கள் தீர்மானத்துக்கு விட்டுவிடுகின்றோம்.

அனைத்து உள்ளங்களையும் எங்கள் திருமண நிகழ்வில் இணைத்துக் கொள்ள விரும்பினோம். ஆனால் பொழுதும் சமூக அரசியல் பொருளாதார கலாசாரத்தின் அழுத்தங்கள் எம்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வைக்கவில்லை. எனவே சிறு கீற்று கவிதைகள் எங்கிருந்தாலும் நம் உறவுகளை சென்றடையும் என்ற நம்பிக்கையுடன் நாம் இருவரும் எதிர்கால புதிய தலைமுறையினரை சிந்திக்கவும் வாசிக்கவும் எழுதவும் தூண்டும் என்ற நினைவுகளுடன் சிறு கீற்று கவிதைகளை பிரசவிக்கின்றோம்.

நன்றிகள்

## அட்டைப்பட விளக்கம்

உறை பனியும்
உயர்கதிர் ஒளியும்
புயல் காற்றும்
பெருமழையும்
உரசிப் பார்த்த போதும்
உயர்ந்தே நிற்கும்
மலை
வறுமையின்
விரக்தியும்
ஏமாற்றத்தின்
தோல்வியும்
தொடர்ந்தெம்மை
விரட்டிய போதும்
நிமிர்ந்தே
நிற்கும் எங்கள் தலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதராக மாறுங்கள்

அழகுப் பாவை அவள்
அம்பிகையின் தோற்றம் - என
கவிகளில் வடித்து விட்டு
கற்பினை சூறையாடுவர்

எத்தனை முகங்கள்
எத்தனை முகவரிகள்
அத்தனையும் முகமூடிகள்



கற்பனையில் மிதந்து வாழத்துடிக்கின்றீர்
மகானாக முயற்சிக்கும்
நீங்கள்
மனிதராக வாழ
மறந்து விட்டீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்


கல்லறையிலும்
காவியத்திலும் மட்டும்
விழுந்த மழை அது

மனிதன்
உள்ளத்தில் வரட்சியால்
மறந்து விட்டான்.

அதனால் தான்
அன்னையின் அன்பிற்கும்
தந்தையின் அரவணைப்பிற்கும்
ஏங்கும் ஆயிரம் உள்ளங்கள்

உள்ளத்தை மறந்து
உடலையும் உடமையையும்
நோக்கும் மணவாளன்

பாசத்தை பங்கு போட வேண்டியவன்
பத்திரத்தை நீட்டி பதில் கேட்கின்றான்.
கண்ணீர்த் துளிகளை
கரைச்சேர்த்திட வேண்டிய
உறவுகள்
கைகளில் உள்ளதை கணக்
கெடுக்கின்றன.



பாசப் பிணைப்பை
காவியத்தில்தான் தேடும் காலமிது
பண்பற்ற மனிதனின்
வஞ்சனை கலந்த வாசகத்தால்
கல்லறைகளைதான் கட்டியெழுப்புகின்றான்
காதலை அல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள உயர்வு

அல்லும் பகலும்
அலைந்து
உழைப்பை ஊரானுக்களித்து
உடம்பை உரமாக்கினார்கள்
பத்து நாளாய் பட்டினி
இருக்கிறார் பத்து ரூபாய் சம்பள
உயர்வுக்காய்

தலைமையில் கொண்ட
விசுவாசமல்ல - அது பித்து

ஏழையின் இரத்தத்தை உறிஞ்சி
மாளிகையில் பஞ்சணையில்
படுத்துறங்கி
தங்க தட்டில் பரிமாறி
வாழும் தலைமைக்கு
வறுமையின் வாசனை
எங்கே புரியப் போகிறது
புரிந்து விட்டால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

உங்கள் கற்பனையை கவிகளில்
கலந்து களங்கப்படுத்தாதீர்கள் - கவிதையை!

கரைந்து போன மனிதத்துவம்
காண மனிதன் விண்வெளிக்குச் செல்கிறான்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் புத்தாண்டு

புத்தாண்டின் முதல்
நாளில் முத்தான
சிந்தனைகள் சிறகடித்தாலும்
கடந்த கால சிதைவுகள்
கலங்க வைக்கின்றன.

இனத்திடையே சமம் மறைந்ததால்
தானமும் குற்றமானது
சமாதானமும் தொலை தூரமானது

அயலவன் அந்நியனானான்
அகிம்சையால் வாழ வழிவகுத்த
புத்தனின் சீடன் இம்சை புரிகிறான்



மலர்களில் வாசனை மறைந்து
இரத்த வாடை வீசுகிறது
பிஞ்சு முகத்தில் பால் வாடை இல்லை
பலி தீர்க்கும்
எண்ணம் அகத்தில் படிந்ததால்!

புத்தாண்டில் கேள்விகளுடன் நான்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதவையின் வாழ்வு

மடுவாய் கிடந்தவள்
மலையாகிட மாலையை சுமந்திட்டாள்
மாங்கல்யம் மண்ணுள் மறைந்ததால்
பள்ளத்தாக்கில் விழுந்த அருவியாய்
பயந்தோடுகிறாள்
முடிவுகள் இன்றி

பெற்ற மக்கள்
பேதமையால் புலம்புகின்றார்கள்
வயிற்றுப் பசியும்
வலி எடுத்த இதயமுமாய் வாழத்துடிக்கிறாள்

அக்கம் பக்கத்தினர்
அலட்சியமாய் பார்க்கின்றார்கள்
எதுவும் கேட்டுவிடுவாளென.

மண்டியிட்டு மடிப்பிச்சை கேட்கவில்லை
ஊரவர் தூற்றுகின்றனர்
உறவுகள் உதறித்தள்ளி விட்டன
உதவிட வேண்டுமென.



ஊரார் பேச்சை மீறி
மண்ணைக் கொத்துகிறாள்
நாளைய விடியலுக்காய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே நீ திரும்பி விடாதே

நீ நடந்து கொண்டிருக்கின்றாய்
பெண்ணே - திரும்பாதே!

கயவர்களது
கற்பனை
உன் பாதையில்
தொடர்வதாய்
கருதி விடாதே.

உன் மனக் காயங்கள் ஆறுமுன்
உடல் காயத்தை அவர்கள் அலசிப் பார்ப்பார்கள்
புண்ணாகிடும் உன் மதி - திரும்பாதே.

கறை படிந்த நிலவையும்
கரை சேரா நதியையும்
உன்னோடு ஒப்பிட்டு
களங்கப் படுத்திடுவர்
திரும்பிடாதே.

அகம் பார்க்க மறந்து
புறம் பார்க்கும் மானிடர்
முகம் பார்த்து உன்னை
முறித்திடுவர்



உன் விழி கூறும்
வழிகளும்
கற்பனை கவிதையாய்
தெரிந்திடும்
அவர் சிந்தனைக்கு
சிதைந்து விடும் உன் பாதை திரும்பாதே.

உன் சிகரத்தை
நோக்கி தொடர்ந்து நட!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகம்

உறங்காத நினைவுகள்
உள்ளத்தை ஆக்கிரமித்ததால் - கண்கள்
மூடிக் கொண்ட போதும்
நித்திரையில் நிலைத்திட
மறுக்கிறது உடல்
புரண்டும் பார்க்கிறேன்
புத்துணர் வோடுதான்
வெளி வருகிறது
அந்த நாள் ஞாபகங்கள்

அழுகையின் ஆரம்பம்
மகிழ்ச்சி
துன்பத்தின் துவக்கம்
இன்பத்தின் இதம்
இத்தனையிலும்
உன் உருவம்தான்
உள்ளத்தில் புகுந்து
ஆட்சி செலுத்தியது



இன்று
காலங்களும் கலந்து
நீயே நானாகி
நானே நீயாகி
வாழ்வு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளிடம் கேள்வி



கொழுந்துக் கூடைச் சுமையை
இறக்கும் நாள் எது?
அல்லும் பகலும் தேயிலைச் செடிக்குள் ஏன்
அலைய விடுகிறாய்?

உயர்ந்த மலைகளுக்கு மத்தியில் எம்மை
பள்ளத்தாக்காய் அமைத்தது
வலியவர் எளியவர்
எம்மீது செய்த சதியா - அல்லது
நீர் செய்த விதியா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரமல்ல

நிலையற்ற வாழ்வை
நிலையானதென
நித்தம் பொய்யுரை
கூறி
நிலைகுலைத்திட்ட
எம் வாழ்வும்
நிலைமாறும்

அரும்புகள் கொய்திடும்
கரங்களின்
கறைகளை நீக்கி,
எழுத்தாணி கொண்டு
எதிர்த்திடும் போது
எம்மவர் கனவும்
நனவாகும்.

கானலைக் கண்டு
மயங்கிய மனமும்
மாயையை விட்டு நீங்கிட
சுயபுத்தியை
கூராக்கிடும் போது
கயவரது கண்களும்
குருடாகிடும் நாளும்
நாளைவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பையாய் பதிந்திட்ட
குணங்களை மாற்றி
கூடைகள் சுமந்த தலையும்
சுதந்திர தாகத்தை
சுவாசிக்க துடித்தெழும் போது
ஆண்டான் அடிமையும்
அழிந்து போகும்
அவலக் குரலும் மறைந்து போகும்

நமக்குண்டு
நமக்குண்டு என
நாம் பின்னாலே
நிற்கும் வரை
நாளை என்ற சொல்தான்
நமக்கு வரும் இன்று

கோடிப் புறத்தில் நின்று
அடுத்தவர் கதைபேசி
குடும்பங்களை சீர்குலைத்து
மார்தட்டி நின்று வீரம் பேசாதீர்

'நாம்' என்னும்
மந்திரத்தை
உச்சரித்து
காலத்தைக் காட்டும்
கல்வியை
கையில் ஏந்திட
எழுந்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பினை
ஊரானுக்களித்து
கூலியை உறவென
மதுவுக்களித்து
உன்னையும்
அழித்தது போதுமென
விட்டெழும்பு.

நாளைய தலைவன்
நம் பிள்ளையென
நாவில் உரைத்து
நலம் பெற்றிட
நல்வழி காட்டிடு.

பள்ளத்தாக்கில்
விழுந்த இச் சிந்தனை சிதறல்கள்
விழித்தெழுந்திடும் போது
சிகரத்தில் உனை
சேர்ந்திடும்.

நிரந்தரமல்ல
நீ படும் வேதனை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

என்ன அதிசயம்
யாருக்கந்த அதிஸ்டம்
10 லெச்சம் பரிசுப் பொருளோடு
விற்பனைக்கு உண்டு இங்கோர் மங்கை.



வீட்டுப் பெண்ணை
விலைபேசி விற்பது
மாட்டுப் பெண்ணாவதற்கா?
ஐந்தறிவு ஜீவனாய்
இன்று
அடை படா விட்டாலும்
அல்லல் அற்ற அரவணைப் புண்டா?
அவள் விழி கூறும் வினா
யாருக்காவது புரிகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்

வானும் விண்ணும்
வந்த வழி
நின்று விட்டதாய்
கற்பனை செய்து விட்டேன்
அறிவியல் சுற்றுவதை
சுட்டி விட்டது.

பருவம்
பொழிவதற்கும்
சுடுவதற்கும்
தாமதிப்பதுமில்லை
முந்திக் கொள்வதுமில்லை
என்றெண்ணியிருந்தேன்.
இயற்கை கூட
மாறி விட்டதை
இன்று தான்
புரிந்து கொண்டேன்
மனமும்
மாறிப் போனது
அழகை கண்டோ
ஆடம்பரத்தைக் கண்டோ அல்ல
உள்ளத்தைக் கண்டு



என்னை
என் உள்ளத்தை
அதன் குமுறலை
வேகத்தை
உன்னில் கண்டேன்
கடந்தவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீறல்கள் தான்
வலிக்க வில்லை இன்று
வடுக்கள் மட்டும் தெரிகிறது.

கடவுளென கல்லாக்கிட
வேண்டாம்
கடமையென கட்டாயத்தில்
தொடர்ந்திடவும் வேண்டாம்.

எதையும் கேட்கவில்லை
என்னில், உன்னில் இருப்பதை
இழந்திட
இணைந்திட வேண்டாம்.

பிடித்த வரை
பிரிவு தொடரவும் வேண்டாம்
பிழவு கண்டால்
கரம் சேர்த்திட வேண்டாம்

மீண்டும் ஒரு
புயலை
சந்திக்கும் சக்தியை
சாதனை செய்கிறேன்
பலமாய் தொடரா விட்டாலும்
பலவீனமாய் மாற்றி விட
வேண்டாம்.

சொல்லும் போதும்
கேட்கும் போதும்
அழகாய் தெரிந்திடும்
நடத்தையில் காட்டும் போது
முட்களும் பதம் பார்த்திடும்
முள்ளானால் வெட்டி விடுங்கள்
மலரானால் அணிந்து கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி நிலைத்திட

கல்லைக் கூட
கரைத்திடும்
கருணைப் பார்வை
கனிவான
அகம் முகத்தில் தெரிகிறது
நீ உரைத்த
தத்துவமும்
சாந்தத்தின் ஊற்றென்று

அதில் நீந்திடும்
மீன்கள்
ஏனோ எம் நாட்டில்
கம்பு கத்திகளுடன் தன்
இனத்தை கொலை செய்கின்றன
பெண்ணினத்தை சூறையாடும்
கயவராய் திரிந்திட
காரணம் என்ன?



கறைபடிந்த கரங்கள்
நாளும் பொழுதும்
உனை கைக்கூப்பினாலும்
மென்மையான மலர்களால்
அர்ச்சித்தாலும்
நீ உரைத்த வேதத்தை
கரமேற்க மறந்ததாலா?
கற்ற மெய்மையை மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்மையை நெஞ்சில்
சுமந்ததாலா?

உருவத்தில் ஒன்றுபட்டு
வார்த்தைக் கோர்வைகள்
வேறுபட்டதற்காய்
எமை வேற்றுமையாய் நோக்கி
மிருகத்தனமாய் நடத்துகின்றார்கள்.



இப்பொழுதாவது தவத்தை களைத்து
எழுந்திடு
போதனைகளை
சாதனையாக்கிட தவப்புதல்வனே

சந்நிதியில் சண்டையிடும்
கயவரை அஹிம்சையால் அல்ல
இம்சையிலாவது
திருத்திடு
நாளைய உலகமேனும்
நலமாக விடியட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உண்மை

கவிதை எழுத நினைத்தேன்
என்னைப் பற்றி
காவியமானது.
என்றும் போல்
காயங்களும், கண்ணீரும்தான்
என காதல்
பரிசளித்த போது.

உறவுகள் வேலி போட்டதாய்
நினைத்தேன்
முரண்பாடுகள் முட்களாய்
முளைந்திருந்தது நம் உள்ளத்தில்
என பின்புதான் அறிந்து கொண்டேன்.

மாலை பொழுதில் ஆதவன்
மறைந்ததாய் விழிகள் உணர்ந்திட்டாலும்
உண்மை யதுவல்லவென
அறிவியல் உரைப்பது போல்
விடியல் இல்லையென்றாலும்
நினைவுகள் போதும்
நிஜங்களில் கலங்கப்படுவதைவிட
நனவுகளில் உண்மையாய் இருப்பேன்.

திருமணம் என்பது
ஓர் மனமாகிடவே
சடங்குகளால் இணைந்து
சம்பிரதாயங்களுக்காகச் சிரித்து
சிந்தனையில் கண்ணீர் வடித்து
சுமையாய் தொடர்வதை விட
பண்பென பிரிவதும்
தனிமையில் வாழ்வது மேல்
என்னில் விழுந்த
காயம் என்னோடே ரணமாகி
மறைந்து விடட்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் மாற்றம்

ஐந்தறிவு ஜீவனின்
வளர்ச்சிப் படியில்
உச்சக்கட்டம் மனிதனாம்
ஆயிரமாண்டுகளுக்கு முன் நடந்த மாற்றம்
இன்றோ ஓர் அறிவு மரமும்
விலங்கும் கூட
தன் இயல்பை மாற்றிடவில்லை

பரம்பரை பழக்கம் - போல
உருவத்தை அவனே மாற்றிக் கொள்கிறான்
மனமோ தானே மாறிக் கொள்கிறது



நல்லதை நாடியல்ல
அழிவுப் பாதையின் முதல் படியான
பாவத்தை நோக்கிய பயணம்
மனிதனில் தொடங்குகிறது இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலி

மங்கையின் மனம் போல் வாழ்வென்றால்
மஞ்சள் கயிறும் பொன்னூஞ்சல்
மரத்தைப் போல் மணவாள னென்றால்
மடிவதற்காய் சம்பிரதாயத்தில்
வழங்கப்பட்ட பொற்தாலியும் தூக்குக் கயிறுதான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன பிடிக்கும்

இயல்பான ஓசையில்
இசை எழுப்பிடும் குயிலையும்
குரலுக்கேற்ற தாளமிடும் நீர் வீழ்ச்சியும்
இனிய இசையில்
அசைந்தாடும் நதியும்
உள்ளத்தை கொண்டு சென்றுவிடும்.

கண்ணுக்கு இனிமை தரும்
குளிர்மையான பசுமையும்
அதில் உறையும் பனித்துளிகளும்
கண்மணியையும் களவாடிவிடும்.

காக்கையின் கருமையிலும்
ஒற்றுமையெனும் வெண்மை
வேற்றுமை காணும் மனிதரையும்
விட உறவாட
உகந்ததென பிடிக்கும்.

மனிதனின் வன்சொல்லிலும்
குருவியின் கீச்சிடும் சத்தம்
சாந்தமாய் தோன்றிடும்.

தலை நரைத்தும்
நாட்டம் குறையா மானிடனும்
நன்றியுடன் சுற்றிவரும்
நாயின் வாலின்
வலிமை பிடிக்கும்.



போலிச் சிரிப்பில்
போதையூட்டும் வாலிபத்தை விட
குழந்தையின் கபடமற்ற
அழுகை பிடிக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தப் பிடியில்

மல்லிகை தோட்டத்தில் கூட
மயக்கத்தின் வாசனை
மறைந்து விட்டது.
மரணித்தவனின் வாடை
வாசனையை களவாடி
விட்ட களமிது.

பருவ மங்கையின்
பருவ மாற்றத்திலும்
பார்க்க பதற்றத்தின்
சாயல்தான்
விழிகள் கதை பேசி
வளையல்கள் உறவாடிய
கதை காவியத்தில்
மட்டும் தான்
மரணபயம்
நெஞ்சில் கவிதையாய்
மாறிவிட்டதே.



பால் மணம்
வீசி
பைந்தமிழ் பேசும்
பிஞ்சு மனதில் கூட
இன்று அதை
தொலைத்து விட்டானே
என்று கூறும் தாயவள்
உள்ளம்
கள்ளமில்லா உள்ளத்தில்
கூட கயவரின்
கருணையற்ற செயல்கள்
அவள் முகத்தில் தெரிகிறதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடமை இழந்த
சோகத்தில்
உண்மையை மறந்து விட்டாயே
மனிதா

மானம் காக்க
மண்ணில் மடிந்த
மங்கையர் எத்தனைபேர்
உயிருடன்
ஈமப்பள்ளி ஏறிய
உடன் பிறப்புகள் எத்தனைபேர்
உன்னவனும்
என்னவனும்
விட்டு சென்றானென
கண்ணீர் சிந்துகின்றோமே

யார் பெற்ற பிள்ளையோ
நம்மவர்க்காய் சென்றதனை
மறந்து விட்டோமே

பஞ்சணையில் படுத்துறங்கி
கட்டளையிட்டு
சட்ட சபையில்
திட்டம் தீட்டும்
அரசியல் அல்ல.

அந்நியர் கொடுக்கும்
அகதிப் பொருளைக் கூட
திருடி பொருள் சேர்க்கும்
அதிகாரிகள் அல்ல.

இன்றோ நாளையோ
அடுத்த கணமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மரணப் பாதையை
தேடிச் செல்லும் வீரரவர்

பூமாலையிட்டு
கல்லாக்கிட வேண்டாம்
அவதூறு பேசி
அலட்சியப்படுத்தாதீர்கள்
அவர்கள் உறைகின்ற
கல்லறைகள்
உங்களது விழிப்புக்கான
அத்திவாரங்கள்.

மலைகள் உள்ள
பள்ளத்தாக்கில் விழுந்த
அருவி - சிகரத்தை
அறிய மறந்த வேதனை

எம் மக்கள்
அறியாமையில் படும்
வேதனை
ஒரு பக்கம்.

காலக் கொடுமையின்
சோதனையில்
பெற்ற அறிவும்
மங்கி விட்ட
வேதனை
மறுபக்கம்

தமிழராய் பிறந்ததற்காய்
தன்மான மிழந்து
தலை குனிவதுதான்
விதி என்று சொல்வதா?
சதி என்று சொல்வதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு அவஸ்தை

மனமே என்னை
மன்னித்து விடு
மனசாட்சியின்றி
சம்பளத்தை வாங்கி விட்டேன்.

கடமையை செய்திட
கால நிலை
தடை செய்கின்றதென்றால்

உடல் நிலையும்
உதவ மறுக்கிறதே
உண்ணும் போதும்
உறங்கும் போதும்
உள்ளம் உதைக்கிறது

உன் பிள்ளையென்றால்
உதாசினமாய்
உரைத்திடுவாயா?
யார் பெற்ற பிள்ளையென்றாலும்
உணர்வுகள் மடிந்தா விட்டது.

மனிதநேயம் கூட
இவர்களை
அந்நியமாய் நோக்குவதேன்.

அகதிகளுக்கு கூட
அனுசரணையுண்டு
தம்மூரில் நிலைக் கெட்டு
வாழும் அவலமேன் இங்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு யாரிடம் ?

சடங்குகளாலும்
சம்பிரதாயங்களாலும்
கட்டுப்பட்டவர்களும்
சட்டங்களால்
பாதுகாப்பளித்து
உரிமை பெற்றவர்களும்

முடக்கப்பட்ட
கைதிகளாக்கப்பட்ட பெண்களா?
யார்?
சங்கடங்களை சந்திப்பவர்கள்
சட்டங்களால் சுதந்திரம்
பெற்றவர்களா?
கலாசார வேலிக்குள் மறைந்து
கொண்டவர்களா?



சுதந்திர காற்றுக்கு
தடை உத்தரவு போட
(நீங்கள்) நாம் யார்
தடுத்து வேலி
போடத்தான் யார்?
தடுத்ததை திறந்து
விட படைத்தவர்
நீங்களா (நாமா) என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவள்
ஓய்வெடுக்க
பந்தாடுவதேன்
எங்களை

வேலியாக வேண்டாம்
மேய்வதை நிறுத்தி விடுங்கள்
ஒளியாக வேண்டாம்
இருளில் ஏமாற்றாதீர்கள்
நாங்கள் நலமாக இருப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் கண்ணீர்


காலையில் கதிரவனும்
கண்விழித்துப் பார்க்கின்றான்

கலங்கிய உள்ளங்களை
கணக்கிடும் வேளையில்
நாழிகையும் நகர்ந்து
நட்சத்திரங்கள் வந்துவிட்டன.

நிலவின் குளிரில்
துன்பத்தின் வெப்புக் குறைந்து
உறங்குவதைக் கண்டு
கவலைகள் களைந்து விட்டதாய்
அறிக்கையிடுகின்றான்.

மனதில் மறைந்து விட்டதென
மதிக்குப் புரிய வில்லையென
அறை கூவலிடும் ஆகாயத்தை
முறைத்துப் பார்க்கிறான்
சிவந்த மேனியுடன் சூரியனும்

வானத்தின் ஆதங்கம்
பாவம் மனிதருக்கு புரியவில்லை
ஆதவனின் அழகில்
மயங்கி விடுகின்றான்
பாவம் வானம்
மழையாய் பொழிகின்றது
கண்ணீர் துளிகளை
தன்னிலை கண்டல்ல
கானலும் தாகம் தீர்த்திடும் என
கனவு காணும் மூடரைக் கண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுடன்

இணைந்த நாம்
பிரிந்திட்டதால்
புரிந்திட நேரமில்லை

நான் உன்னில்
கண்ட முதல் அன்பை
இன்று தொலைத்ததாய் தேடுகின்றேன்



பிரிந்திடும் நாளில்
இணைந்திடும் எண்ணம் தோன்றிட
இன்று ஏனோ கசந்தது
ஊமைக்கவியாய் இருப்பது
இரகசியமல்ல
தேடல்கள் என்று
எப்போது புரியப்போகிறது

அகத்துள் இருப்பதை
புறத்தில் தேடுவது
புண்ணாக்கியது என்னுள்ளத்தை

காதலில் கற்பனை வேண்டாம்
காவியம் படைத்திட வேண்டாம்
கனவினில் எம்மை தொலைத்திட வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஜத்தினில் நினைவுகளை
செம்மை படுத்த துணிந்திடுவோம்

இனித்திடும் இன்றைய பொழுதை
நாளை தொலைத்து
எதிர்காலத்திற்காய் ஏங்க வேண்டாம்
எண்ணியதை முடித்திட
எம்முள் கலந்த கனவுகளை
தள்ளி வைப்போம்
இன்றைய பொழுதை எம் முயற்சிக்காய்
நாளைய விடிவுக்காய் பணயம் வைப்போம்
எதிர்காலம் நம்மிலல்ல என்றாலும்
இருந்திட்டால் இன்முகம் பேண
இன்னலையும் இன்பமாய் ஏற்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி

கற்பனையில் வருவது
கவிதையென்றால்
கனவாகும் நினைவுகள்
அதில் வேண்டாம்
நாளைய விடியலில்
நலமாகும் சிந்தனைகள்
துளிர்விட்டால்
மலர்களும் மாலைகளும்
உனக்குண்டு
ஏந்தும் கரங்கள்
செயல்பட்டால் காய்களும் கனிகளும்
பாருக்குண்டு
நாளைய விடிவு
நலமாக
கற்பனையிலும்
கலந்துவிடு
தத்துவத்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண்ணுக்கொரு கவிதை

எங்கள்
இனப்பெருக்கம்- இடைஞ்சலாம்
அ - வ- ர்- க- ளு- க்கு
திட்டமிட்டே
அறுத்தெறியப்பட்டது
எங்கள் - தாய்களின்
கருவறைகள்

எங்கள் - உறவுகள்
புதைக்கபட்ட - இடங்கள் கல்லறைகள்
பிடுங்கி யெறியப்பட்டன

எங்கள் - உதிரம்
இரண்டறக் கலந்திருந்ததாலோ
என்னவோ- அந்த
நூற்றிஐந்து ஏக்கர்
தேயிலைச் செடிகளும்
நிர்மூலமாக்கப்பட்டன



மூடப்பட்ட ஆரம்பப் பள்ளியும்
போக்குவரத்தும்
அந்நியரால் அழிந்து போன
ஹிரோசீமாவை நினைவு கூரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிக் கேட்க முனைந்தபோது
விரட்டப்பட்டோம்
அதுவல்ல எம் கவலை

நம் கவலை இதுதான்
மூடிய ஆரம்ப பள்ளியும்
ஒழிந்து விளையாடிய தேயிலைச் செடியும்
எழுதிப் பழகிய கோடிப் புறமும்
கைகோர்த்து நடந்த வீதியுமாய்
மறைந்து போன இறந்த காலம்
மீண்டும் நிகழ்காலமாய்
செதுக்கிட சேர்ந்திடுமோ - எம்மினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களூர் பஸ்வண்டி

இருக்கைகளோ
ஐம்பத்தினான்கு - சனம்
இருப்பதுவோ - எண்பத்தி நான்கு
இது எங்களூர் பஸ்வண்டி

பயணச்சீட்டு
இல்லையெனின் தண்டப் பணம்
இருமடங்கு
பயணச்சீட்டு
வைத்திருந்தும் - பயணப்பணம்
மும்டங்கு

எந்த ஊர் வண்டிக்கும்
ஒருவர் தாம் சாரதியாம்
எங்களூர் வண்டிக்கோ
சாரதிகள் ஏராளம்
தள்ளிக் கொண்டு
போவதற்காம்
அதி காலை
ஐந்து மணிக்கு - விழித்ததெல்லாம்
கிடையாது
விழிப்பதெல்லாம்
அதிகாலை மூன்று மணி
இப்படியும்
இல்லையெனின்
கடந்து சென்ற
வண்டிக்கு - கைகாட்டி
என்ன பயன்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும்

உன்னிடம் கேட்டது அன்பை
அதை அடையும் வழியை
காட்ட மறந்தாலும்
கதைத்திருக்கலாமே
கலங்க மாட்டேன்.
கண்ட ஏமாற்றங்களில்
ஓர் துளியிது.

கவிதைகளில் சாதனை
பெறுவதை காதலி
பாவினில் பாரிற்கு
பார்வை கொடுப்பதை காதல் செய்

உயிர்ப்பித்த உன்
அன்னையை காதலி
கரம் சேர்த்து உரமூட்டும்
உடன் பிறப்பை காதலி



தூரப் பார்வையில் விமர்சிக்கும்
உறவினைவிட
அருகிலிருந்தும் ஊக்கப்படுத்தும்
நட்பினை காதலி
அதிலொரு அங்கமாய்
தொடர்ந்திடுவேன்
பாசமிகு தங்கையாய்
நட்பு கலந்த குறும்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்களை எழுத ஊக்குவித்த பெற்றோருக்கும் உறவினர், நண்பர்களுக்கும், இந்த கவிதை தொகுதிக்கு எங்களை பற்றிய அறிமுகத்தை எழுதிய அரசியல்துறை ஆய்வாளர் திரு.சி.அ.யோதிலிங்கம், வாழ்த்துரை வழங்கிய கவிஞர் திருமதி ஔவை விக்னேஸ்வரன், நூலாக உருபெறுவதற்கு உற்சாகமூட்டிய பத்திரிகையாளர் திரு.அ.நிக்ஸன், அட்டைபடம் வரைந்த திரு.மகேஸ்வரன், அத்தோடு திரு.சி.புகழேந்திரன், செல்வன் ச.பார்தீபன், திரு.அ.ஜெயகுமார், பாஸ்ட் பிரிண்டஸ் நிறுவனத்தார் மற்றும் **"சிறு கீற்று"** வெளிவரவும் திருமண நிகழ்வு சிறப்பாக நடைபெறவும் காரணமாக இருந்த அனைத்து நல்ல உள்ளங் களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

**வேலு இந்திரசெல்வன்**
**துரைராஜ் தாரணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையகம் பெற்றெடுத்த இந்திரச்செல்வனும் தாரணியும் திருமண வாழ்வில் இணையும் போது முதல் பிரசவமாக இவ் கவிதை தொகுதி வெளிவருகின்றது.

இது இவர்களின் இணைந்த வாழ்வின் முதற் குறியீடு மட்டுமல்ல. ஒரு சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடும் கூட.

வாழ்வை ஆரம்பிக்கும் போதே சமூகத்திற்காக வாழ்வோம் என கவிதை மூலம் இவர்கள் பிரகடனப்படுத்துகின்றனர்.

வேலு இந்திரச்செல்வன் அலகல தோட்டத்தின் ஒளிக்கீற்று. இவர் அலகல பாரதி தோட்டப்பாடசாலை, கலகா இராமகிருஸ்ணா மத்திய கல்லூரி, நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரி என்பவற்றில் கல்வி கற்றவர். க.பொ.த உயர்தரத்துடன் ஆசிரியராகி கொட்டகல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றவர். கூடவே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் டிப்ளோமா கல்வியையும், கொழும்பு விழுதுகள் மேம்பாட்டு நிறுவனத்தில் ஊடகவியல் டிப்ளோமாக் கல்வியையும் பெற்றவர்.

சென்லெனாட்ஸ் தோட்டத்தின் ஒளிக்கீற்று தாரணி துரைராஜ். இவர் சென்லெனாட்ஸ் தமிழ் வித்தியாலயம், ராகலை தமிழ் மகா வித்தியாலயம் என்பவற்றில் பாடசாலை கல்வியையும் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் ஆசிரிய கல்வியையும் பெற்றவர்

இந்திரச்செல்வனின் ஆசிரியப் பணி நு/வ/ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயத்திலும் தாரணியின் ஆசிரியப்பணி நு/ஹ/எலமுல்ல தமிழ் வித்தியாலயத்திலும் தொடர்கின்றது. ஆசிரியப்பணியோடு இவர்களின் இணைந்த வாழ்வு கல்வி, படைப்பு பணி, சமூகப்பணி என விரிந்து செல்கின்றது.

முதல் படைப்புப் பிரசவத்தின் வெற்றிபோல தொடர் படைப்புப் பிரசவங்களும் வெற்றிகரமாக அமையட்டும்.

**அன்புடன்**
**சி.அ.யோதிலிங்கம்**

*Fast Printers* : 289-1/2, Galle Road, Colombo - 06 T.P-0112362312.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org